சல்லியகரணி துண்டுபட்ட பாகங்களை ஒட்டவைக்குமாம். காலங்கி நாதர் கஞ்ச மலையின் ஒரு பகுதியான சித்தர் மலை (சித்தர்கோயில்)யோடு பேசப்படுவார் திருமந்திரப் பாட்டொன்றில்

... கந்தரு காலங்கி கஞ்சமலை யானோடு

என்னுமோர் குறிப்பினைக் கொண்டு காலங்கி சித்தர் திருமூலர் வழியினர் என்பர். **த.நா.**

## காலச் சக்கரம்

கோயம்புத்தூர் நகரிலிருந்து வெளிவந்த மாத இதழ். 1946இல் தொழிலதிபர் ப. நாச்சிமுத்துக் கவுண்டர் நடத்திய இந்த இதழ் பெரியசாமித் தூரனை ஆசிரிய ராகவும், கே.எஸ். பெரியசாமியைத் துணை ஆசிரியராகவும் கொண்டு தொடங்கப் பட்டது. கோவை அய்யாமுத்து ஆசிரியப் பொறுப்பு ஏற்பதாக இருந்தது. ஆயினும் அது நிகழவில்லை. 'டைம்' ஆங்கில இதழைப் போன்ற அமைப்பை இவ்விதழ் கொண்டிருந்தது. அகிலன் இவ்விதழில் தொடர்ந்து எழுதியதாகத் தெரிகிறது. 1947இல் கலைக்களஞ்சியப் பணிக்கெனத் தூரன் சென்னை செல்ல நேரிட்டதால் இதழ் நிறுத்தப்பட்டது. **சிற்பி**

## காலிங்கராயன் (கி.பி. 13ஆம் நூற்.)

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கனகபுரம் என்னும் சிற்றூரில் நஞ்சையன் என்பவருக்கு மகனாகப் பிறந்த வன் லிங்கையன். கொங்கு நாட்டை கி.பி.13ஆம் நூற் றாண்டை வீரபாண்டியன் என்னும் கொங்குப் பாண்டியன் ஆட்சி புரிந்தான். லிங்கையன் வீரபாண்டியன் படையில் சேர்ந்தான். விரைவில் தன் ஆற்றலால், அறிவுத்திறனால் முக்கியப் பொறுப்புக்களை ஏற்றான். வீரபாண்டி யனால் காலிங்கராயன் என்னும் சிறப்புப் பட்டப் பெயரைப் பெற்றான். தளபதியாக உயர்ந்தான். பாண்டியனுக்கு அமைச்சரு மானான். கொங்கு நாட்டின் வடகொங்குப் பகுதிக்கு அதிகாரம் செலுத்தும் உயர் அலுவலன் ஆனான். வீர பாண்டியனின் 'காரியத்துக்குக் கர்த்தர்' என்று தன்னை அழைத்துக்கொண்டான். வெள்ளோட்டைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான்.



அங்கு சிவாலயத் திருப்பணி செய்தான். காலிங்கராயன் தன் ஆட்சிக் காலத்தில் பல குளங்களை வெட்டினான். பல பழைய குளங்களைப் பழுது பார்த்தான்; சாலைகள் அமைத்தான். காடுகளை அழித்து நாடாக்கி அங்கு மக்களைக் குடியேற்றினான். புதியதாகக் குடியேறிய மக்களுக்குக் குறிப்பிட்ட காலம்வரை வரி இல்லை என்று உத்தரவு பிறப்பித்தான். ஆலயங்கள் கட்டினான். கொடைகள் பல அளித்தான். கோயில் அதிகாரிகள் கோயில் நிலங்களை உழுது மேல்வாரமாக நெல்லைக் கொடுக்காதவர் வீட்டில் மண்கலங்களைத் தகர்த்து வெண்கலங்களைப் பறிமுதல் செய்தனர். ஆனால் காலிங்கராயன் வெண்கலம் பறிக்குமிடத்து மண்கலம் தந்து வெண்கலம் பறிக்க வேண்டும் என்று உத்தர விட்டான். பவானியாறு காவிரி யோடு கலக்கும் இடத்தில் ஓர் அணை கட்டிக் கொடுமுடி ஆவுடையாப்பாறை வரை ஒரு கால்வாய் வெட்ட முடிவு செய்தான். 'காலிங்கராயன் வினியோகம்' என்று வரி ஒன்றை அப்பணிக்கு வசூலித்தான். பாண்டியனிடம் பேருதவி கோரிப்பெற்றான். பவானி அருகில் எலவமூலையில் கால் வாய்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப் பட்டன. 56½ மைல் நீளம் கால்வாய் வெட்டுவது எப்படி என்று அங்கு நிலத்தில் வரைபடம்போல் மாதிரி தயாரிக்கப்பட்டது.

பவானியிலிருந்து கொடுமுடிக்கு நேராகச் சென்றால் 32 மைல்தான். மேடுகண்ட இடமெல்லாம் கால்வாயை வளைத்து வளைத்து வெட்டியதால் கால்வாய் நீளம் 56½ மைல் ஆகிறது. மக்கள் அதனால் அதைக் கோணவாய்க்கால் என்றனர். பாம்பு வழிகாட்ட வெட்டினான் என்ற செவி வழிச் செய்தியும் உண்டு. ஊராட்சிக் கோட்டை மலையில் கல் உடைத்து எருமை வண்டிகள் மூலம் கல் கொண்டு வந்து அரும்பாடுபட்டு அணையைக் கட்டி முடித்தான். 12 ஆண்டுகள் ஆகியது. பின்னாளில் காலிங்கராயன் குடும்பம் பொள்ளாச்சி ஊத்துக்குழிக்குக் குடியேறிவிட்டது. பன்னிரண்டு ஆண்டுகளும் தவம் இருப்பது போல் விரதம் இருந்து தாடி வளர்த்துப் பணிகளை மேற்கொண்டான். அணை கட்டி வாய்க்கால் வெட்டி முடித்த பின்னர் தான் தாடியை எடுப்பது என்று சபதம் செய்திருந்தான். அணைகட்டி முடிக்கப் பட்டது. கால்வாயும் வெட்டியாயிற்று. தண்ணீரும் திறந்து விடப்பட்டது. பல ஆண்டு இடைவிடாமல் பணி செய்த அதிகச் சோர்வில் காலிங்கராயன் அமர்ந்து படுத்துத் தூங்கி விட்டான். களைப்பு மிகுதியால் நன்கு கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். குடும்ப நாவிதன் தன் தலைவன் காலிங்கராயனின் உறக்கம் கெடாமலேயே தாடியை எடுத்து விட்டு எதிரே ஒரு கண்ணாடி ஒன்றையும் வைத்து விட்டு ஒதுங்கியிருந்தான்; காலிங்கராயன் விழித்து எழுந்தான். நாவிதன் செயலை உணர்ந்து மிகவும் பாராட்டினான்; 'உனக்கு இன்னும் என்ன வேண்டுமோ கேள்' என்றான். நாவிதன் 'சுவாமி உங்கள் பெயர் உள்ளளவும் என் பெயரும் நிலைத் திருக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டான். காலிங்கராயன் அணை கட்டும்போது தங்கியிருந்த காலிங்கராயன் பாளையத்திற்கு 'நாவிதன் பாளையம்' என்று பெயரிட அன்றே ஆணையிட்டான். வெள்ளோட்டில் 'கம்மாளர்கள் தாங்கள் புறப்பட வேண்டும் இடங்களுக்குக் கால்களிலே பாதரட்சை கோத்துக் கொள்ளவும், அவர்கள் தங்கள் வீடுகளுக்குச் சாந்திட்டுக் கொள்ளவும், தங்கள் வீட்டு நன்மை தீமைகளுக்குப் பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக் கொள்ளவும் உரிமை அளித்தேன். இப்படிக்குக் காலிங்கராயன் எழுத்து' என்று அக்கல்வெட்டுக் காணப்படுகிறது.

> திரைகொண்ட வாரியை மாலடைத்தான்
> செழுங்காவிரியை
> உரைகொண்ட சோழன் முனாள் அடைத்தான்
> உலகேழறிய
> வரைகொண்ட பூந்துறை நாடது வாழப்
> பவானிதனைக்
> கரைகொண்டு அடைத்தவன் வெள்ளோடைச்
> சாத்தந்தை காலிங்கனே

என்பது காலிங்கராயனைப் புகழும் பாடல்.

காலிங்கராயன் தான் கட்டிய அணையிலும் கால்வாயிலும் தன் சந்ததியார் கொங்கு வேளாளரில் சாத்தந்தை குலத்தார் எந்த உரிமையையும் பெறக் கூடாது. அணை, கால்வாயில் தண்ணீர் கூடக் குடிக்கக்கூடாது என்று கட்டளையிட்டான். அதனால் அவன் குலத்தார் பொள்ளாச்சி அருகில் உள்ள ஊத்துக் குழிக்குக் குடி பெயர்ந்தனர். காலிங்க ராயனைப் பிற்கால மக்கள் தெய்வமாகவே அணையில் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தனர். மழை சரியாகப் பெய்து அணையில் தண்ணீர் நிறையாவிட்டால் காலிங்க ராயனை வழிபட்டால் மழை வரும் என்று நம்பினர். பெரியசாமித் தூரன் 'காளிங்க ராயன் கொடை' என்று அரிய சிறுகதை ஒன்றைப் படைத்து இக்கொடையை நினைவு கூர்ந்துள்ளார். **இராசு.**

## காலிங்கராயன் அணைப் பட்டயம்

இப்பட்டயத்தின் முன்பகுதி எழுமாத்தூர் வேலம்பாளையம் புலவர் வே.ரா. தெய்வ சிகாமணிக் கவுண்டர் தொகுப்பிலும், பிற்பகுதி தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித் துறையிலும் உள்ளது. காலம் பிழையாக உள்ளது. மேல்கரைப் பூந்துறை